# புல்லாங்குழலும் துப்பாக்கிக் குழலும் இனிதென்பர் தம் மக்கள்

இரா. றஜீன்குமார்

புலம்பெயர் தமிழர் யாம்
குழந்தைகள் பெறுவது, இன்பம் துய்த்ததால் அல்ல
பிள்ளைகள் வேண்டும் என்பதற்காய் அல்ல
இறைவன் தந்ததால் அல்ல
மேற்கு நாடுகளின் குடியுரிமைக்காய் அல்ல
மேலதிகமாகக் கிடைக்கும் பிள்ளை வளர்ப்புக்கான -
அரச உதவிப் பணத்துக்காகவும் அல்ல
யுத்தத்தால் அழிந்த தமிழ்ச் சந்ததியின்
அழிவை சமன் செய்யவென
விசுவாசத்துடன் பிரகடனிக்கிறோம்.

*******

தவழும் குழந்தையின் முதுகை அழுத்தும்
கருங்கற்பாறையை காணாதிருத்தல்
இறந்த குழந்தையில் பாய்ந்த குண்டு
நெஞ்சிலா - முதுகிலா - உடலே இல்லையா
தேடுதல் - இனம் பிரித்து அறிதல்
இயலாதாயின் அழாதாயினும் இருத்தல்
பற்றிய வகுப்புகளில் பங்கெடுத்தல்
வீரமாய் விளம்பப்படுவதால்
உயிரினும் ஓம்பப்படும்.

தேம்பியழும் குழந்தை திடங் கொண்டு
சேதி சொல்லுதோ
இனியும் சூல் கொள்ளச் சம்மதியாக்
கருப்பைகள் குதித்தோட
துரத்தி முயங்கி விஷம் கொட்டி
பிறளும் இடம் பார்த்து சரி செய்தோம்
வீரக்கலவி வீரக்கலவி

ஆநிரை கவர்ந்த பின் பெண்டிரைக் கவர்ந்து
ஊரைக் கொளுத்திய சாம்பர் மேட்டில் கொத்தலம் அமைத்து
அவர் போய் இவரும் இவர் போய் அவரும்
சேரன் - சோழன் - பாண்டியன் பொறித்த
கொடியின் பரம்பரை நாம்
வீர சுதந்திரம் வேண்டி நின்றோம்
இனி வேறொன்று கொள்வோமா

(02.05.1993இல் இருந்து 01.06.2006வரை வளர்த்தெடுக்கப்பட்டது.)